## சுயதொழில் செய்வோரின் வரி கடப்பாடுகள்

நீங்கள் வர்த்தகம், வியாபாரம், தேர்ச்சித் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் செய்பவராக இருந்தால் நீங்கள் சுயதொழில் புரிபவர் என்று கருதப்படுவீர்கள். நீங்கள் தனி உரிமையாளராகவோ கூட்டுத் தொழிலின் பங்காளராகவோ இருக்கலாம்.

சுயதொழில் புரியும் ஒருவர் செய்யக்கூடிய வேலைகள்:

| | |
|---|---|
| வர்த்தகம் மற்றும் வியாபாரம்: | விவசாயம் , பொருள் உற்பத்தி, கட்டுமானம், மொத்த அல்லது சில்லரை வியாபாரம் |
| தேர்ச்சித் தொழில்: | மருத்துவப் பணி புரிபவர், சட்ட வல்லுனர், கணக்கியல் வல்லுனர், காப்புறுதி முகவர், சொத்து முகவர் |
| வாழ்கைத் தொழில் : | பகுதிநேர புகைப்படக் கலைஞர், உணவு அங்காடி வியாபாரி, குழந்தையை கவனித்துக்கொள்பவர், வாடகை உந்து வண்டி ஓட்டுநர் அல்லது துணைப்பாட ஆசிரியர் |

ஒரு சுயதொழில் செய்பவரான உங்களுக்கு பின்வரும் கடப்பாடுகள் உள்ளன.

(அ) உங்கள் தொழிலின் முறையான பதிவுகள் மற்றும் கணக்குகளை 5 ஆண்டுகளுக்கு வைத்திருக்க வேண்டும்.

(ஆ) உங்கள் வருமான வரிப் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்து மற்றும் செலுத்த வேண்டிய வரித் தொகையை மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக செலுத்த வேண்டும்.

(இ) கட்டாய மெடிசேவ் சந்தாக்களைச் செலுத்த வேண்டும்.

(ஈ) அடுத்த 12 மாதங்களில் உங்கள் வியாபாரத்தின் மொத்த விற்றுவரவு (சிங்கப்பூரில் வரி விதிக்கத்தக்க சரக்குகள் மற்றும் / அல்லது சேவைகள்) $1 லட்சத்தைத் தாண்டும் என்று நீங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் IRAS-ன் பொருள் சேவை வரிக்குப் பதிந்துக்கொண்ட ஒருவராக இருக்க வேண்டும்.

## முறையான கணக்கறிக்கைகள் மற்றும் ஆவணங்களை வைத்துக்கொள்ளுதல்

### 1. நான் என்ன தொழில் ஆவணங்களை வைத்துக்கொள்ள வேண்டும்?

வருமானவரியின் பொருட்டு 1 ஜனவரி 2007 முதல், நீங்கள் உங்கள் தொழில் பரிவர்த்தனைகள் குறித்த முறையான ஆவணங்கள் மற்றும் கணக்கறிக்கைகளை 5 ஆண்டுகளுக்கு வைத்திருக்க வேண்டும். இது உங்கள் வருமானம் மற்றும் அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகளை எங்களால் உடனே உறுதிப்படுத்த உதவும்.

உங்கள் வியாபாரப் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்யும் அனைத்து ஆவணங்கள் அல்லது இந்த பரிவர்த்தனைகளை சுலபமாகக் கண்டறிந்து சரிபார்க்க உதவும் கணக்கியல் அமைப்பை கட்டாயம் வைத்திருக்க வேண்டும். வைத்திருக்க வேண்டிய ஆவணங்களில் கீழ் கண்டவை உள்ளடங்கும்:

(அ) வருமானம் / வரவு சீட்டுகள் அல்லது செலவு / கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கிய கணக்கு பதிவேட்டுப் புத்தகங்கள்;
(ஆ) எந்த ஒரு கணக்குப் பதிவேட்டுப் புத்தகங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளவற்றை உறுதிப்படுத்த தேவைப்படும் விலைப்பட்டியல்கள், உறுதிசீட்டுகள், வரவுசீட்டுகள் மற்றும் இது போன்ற பிற ஆவணங்கள்; மற்றும்
(இ) வர்த்தகம், வியாபாரம், தேர்ச்சித் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் சம்பந்தமான மற்ற பிற குறிப்புகள்.

குறிப்பாக சரிபார்ப்பதற்குக் கேட்கப்பட்டாலன்றி இந்த ஆவணங்களை அனுப்பத் தேவையில்லை. தவறான ஆவணங்கள் உத்தேசத் தொகை ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

## 2. நான் எவ்வாறு ஆவணங்களை வைத்துக் கொள்ளவது?

### 2.1 <u>வங்கிக் கணக்குகள்</u>

நீங்கள் தொழில் மற்றும் தனியார் தேவைகளுக்காக தனித்தனி வங்கிக் கணக்குகளை பராமரிக்கவேண்டும் மற்றும் இந்த தொழில் வங்கிக் கணக்குகள் தொழில் பரிமாற்றங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். நீங்கள் தொழில் மற்றும் சொந்த வங்கிக் கணக்குகளின் வங்கி அறிக்கைகள் அல்லது கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கவேண்டும்.

### 2.2 <u>விற்றுவரவு / விற்பனை</u>

உங்கள் விற்றுவரவு / விற்பனை பதிவுகளை துல்லியமாக வைத்திருப்பதை உறுதி செய்துகொள்வதற்காக நீங்கள் பின்வருவனவற்றைப் பராமரிக்க வேண்டும்:

(அ) பணப் பதிவேடு நாடா
(ஆ) வரவுசீட்டுப் புத்தகம்
(இ) வழங்கிய விலைப்பட்டியல்கள்
(ஈ) தனிப் பயன்பாட்டுக்காகப் பயன்படுத்திய சரக்குகள் விவரம் குறித்த புத்தகம்
(உ) திருப்பி அனுப்பப்பட்ட சரக்குகளுக்கான கடன் குறிப்புகள்
(ஊ) ஆண்டு / மாதாந்திர தரகு அறிக்கைகள் (தரகு முகவர்கள்)

**(அ) பணப் பதிவு நாடா**

உட்புறம் ஒரு நாடாவைக் கொண்டிருக்கும் ஒரு பணப்பதிவேடு உங்கள் அனைத்து ரொக்க பரிவர்த்தனைகளையும் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படலாம். நீங்கள் உங்கள் ரொக்க பரிவர்த்தனை முழுவதையும் பதிவு செய்து, உட்புற நாடாவை ஒரு ஆதார ஆவணமாக கைவசம் வைத்திருக்க வேண்டும்.

ஒரு நாளின் இறுதியில் மொத்தத் தொகையின் வரவு சீட்டுக்களைப் பணப் புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும். இந்த நாடாக்கள் மற்றும் உங்கள் பதிவுகளுக்கிடையே, ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், நீங்கள் ஒரு எழுத்துப்பூர்வமான விளக்கத்தை அளித்து அதை அந்தக் குறிப்பிட்ட நாடாவுடன் இணைக்கவேண்டும்.

**(ஆ) வரவுசீட்டுப் புத்தகம்**

எந்த ஒரு ஆண்டின் பொருள் விற்பனையில் $18,000-க்கு அதிகமாகவும், வழங்கியச் சேவையில் $12,000-க்கு அதிகமாகவும், உங்களுக்கு மொத்த வரவு கிடைத்திருந்தால் நீங்கள் வரிசை எண் வாரியான அச்சிட்ட வரவு சீட்டுகளை வெளியிட வேண்டும். இவற்றின் படிகளை நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆயினும் கீழ்கண்ட ஏதாவது ஒரு முறையைப் பயன்படுத்தி, உங்கள் முழுமையான, தவறில்லாத விற்றுவரவை உங்களால் உறுதிபடுத்த முடியுமானால், நீங்கள் வரவுசீட்டுகளை வெளியிடத் தேவையில்லை:

(அ) **<u>அனைத்து</u>** ரொக்க விற்பனைகளுக்கும் ரொக்கப் பதிவேட்டைப் பயன்படுத்தவும் மற்றும் **<u>அனைத்து</u>** கடன்முறை விற்பனைகளுக்கும் விலைப்பட்டியல்களை வெளியிடவும்.

(ஆ) **<u>அனைத்து</u>** விற்பனைகளையும் கணக்கியல் மென்பொருள் உள் வைக்கவும். விலைப்பட்டியல்கள், இந்த அமைப்பின் மூலம் அனைத்து விற்பனை பரிவர்த்தனைகளுக்கும் தயாரிக்கப்படவேண்டும் மற்றும் இவ்விலைப்பட்டியல்களின் படிகளை வைத்துக்கொள்ள வேண்டும்.

(இ) பணப்பதிவேடு அல்லது கணக்கியல் மென்பொருள் இல்லாதபட்சத்தில், ஒவ்வொரு நாளின் விற்பனைகளைப் பதிவு செய்வதற்காக ஒரு விற்பனைப் புத்தகத்தைப் பராமரிக்க வேண்டும், அதில் **<u>அனைத்து</u>** ரொக்கம் மற்றும் கடன்முறை விற்பனைகளைப் பதிவுசெய்ய வேண்டும்.

வாடிக்கையாளர்கள் கேட்கும்பட்சத்தில், தொடர்ந்து அவர்களுக்கு வரவுசீட்டுகள் கட்டாயமாகக் கொடுக்கப்படவேண்டும். பொருள் சேவை வரிக்குப் பதிந்துக்கொண்ட வியாபாரங்கள், பொருள் சேவை வரிச் சட்டப்படி, கட்டாயமாகத் தொடர்ந்து **வரி விலைப்பட்டியல்களைக்** கொடுக்க வேண்டும், ஏனெனில் வரவுசீட்டுகள் கொடுக்கப்படுவதற்கான விலக்கு வரி விலைப்பட்டியல்கள் கொடுக்கப்படுவதற்குக் கிடையாது.

**(இ) கொடுக்கப்பட்ட விலைப்பட்டியல்கள்**
உங்கள் அனைத்து கடன்முறை விற்பனைகளைப் பதிவுசெய்ய, விலைப்பட்டியல்கள் கொடுக்கப்பட வேண்டும். உங்களுடைய விலைப்பட்டியல்களை நீங்களே வடிவமைத்து அச்சடித்துக் கொள்ளலாம் அல்லது எழுதுபொருள் விற்பனையாளர்களிடம் கிடைக்கும் முன்பே அச்சடிக்கப்பட்ட விலைப்பட்டியல்களைப் பயன்படுத்தலாம்.

ஒரு விற்பனை விலைப்பட்டியலில் பின்வரும் தகவல் இருக்க வேண்டும்:

(அ) தொழிலின் பெயர், முகவரி, தொலைபேசி எண் மற்றும் தொழில் பதிவு எண்
(ஆ) விலைப்பட்டியல் எண்
(இ) விலைப்பட்டியல் நாள்
(ஈ) வாடிக்கையாளரின் பெயர் மற்றும் முகவரி
(உ) பொருளின் விவரம், அளவு மற்றும் விலை
(ஊ) ஏதேனும் பணக்கழிவு வழங்கப்பட்டதா
(எ) மொத்த விலை

பொருள் சேவை வரிக்குப் பதிந்துக்கொண்ட வியாபாரங்கள், பொருள் சேவை வரிச் சட்டப்படி, கட்டாயமாகத் தொடர்ந்து **வரி விலைப்பட்டியல்களைக்** கொடுக்க வேண்டும். மேல் விவரங்களுக்கு IRAS வலைத்தளத்தில் ‘Information on Goods & Services Tax’ தலைப்பின் கீழ் ‘Keeping Proper Records’ பிரிவைக் காணவும்

**(ஈ) திருப்பி அனுப்பப்பட்டப் பொருட்கள்**

சேதம், பழுது, தவறான பொருட்கள் அல்லது வழங்கியப் பொருட்களின் எண்ணிக்கையின் காரணத்தால் விற்கப்பட்டப் பொருட்கள் திருப்பி அனுப்பப்படலாம். விற்பனையுடன் இதனைச் சரிகட்ட நீங்கள் உங்கள் வாடிக்கையாளருக்கு ஒரு கடன் அறிக்கையைக் கொடுக்கலாம் அல்லது ‘‘திருப்பி அனுப்பப்பட்டப் பொருட்கள்’’ என்ற தலைப்பில் உங்கள் விற்பனைப் பதிவேட்டுப் புத்தகத்தில் இந்த பரிவர்த்தனையைப் பதிவுசெய்யலாம்.

**(உ) தனிப் பயன்பாட்டுக்காகப் பயன்படுத்தியப் பொருட்கள்**

உங்கள் வியாபாரத்திற்காக வாங்கிய, உங்கள் வியாபாரத்தால் தயாரித்த அல்லது உற்பத்தி செய்யப்பட்ட எந்த பொருட்களையாவது உங்கள் சொந்த பயன்பாட்டிற்காகவோ உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்களின் பயன்பாட்டிற்காகவோ நீங்கள் எடுத்திருந்தால், உங்கள் வியாபாரப் பதிவேட்டில் இவை பதிவு செய்யப்பட வேண்டும். அனைத்து தனிநபர் பயன்பாட்டிற்காகவும் எடுக்கப்பட்டச் சரக்குகளின் விற்பனை விலை, விற்பனையில் சேர்க்கப்பட வேண்டும். இது தொடர்பான விவரங்களை ‘‘தனிநபர் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்ட பொருட்கள்’’ புத்தகத்தில் பதிவுசெய்யலாம். பதிவுசெய்யப்பட வேண்டிய விவரங்கள்:

(a) பொருட்கள் எடுக்கப்பட்ட நாள்
(b) பொருட்களின் விவரம்
(c) பொருட்களின் விற்பனை விலை

**(ஊ) தரகு முகவர்களுக்கான ஆண்டு மாதாந்திர தரகு அறிக்கை**

நீங்கள் ஒரு தரகு முகவராக இருந்தால் எ.கா. காப்புறுதி முகவர், நிலச் சொத்து முகவர், பங்கீட்டாளர், தரகர் போன்றோர், உங்கள் நிறுவனம் வழங்கிய ஆண்டு அல்லது மாதாந்திர தரகு அறிக்கைகளை வைத்திருக்க வேண்டும்.

2.3 <u>வாடகை வருமானம்</u>

பொதுவாக வாடகை வருமானத்தை உங்கள் வியாபார விற்றுவரவிலிருந்து வேறுபட்ட வருமானமாக நீங்கள் கருத வேண்டும்.

இருப்பினும் நீங்கள் ஒரு உணவு நிறுவனம் ஒன்றை நடத்துகிறீர்கள் என்றால் எ.கா. ஒரு உணவுக் கடை, உணவு விடுதி போன்றவற்றின் விற்பனைச் சாவடியைக் குத்தகைக்கு விட்டிருந்தால், நீங்கள் அந்த வாடகை வருவாயை உங்கள் தொழில் விற்றுவரவில் பெற்றதாக சேர்க்கவேண்டும். வாடகையின் காலம் மற்றும் ஏற்கப்பட்ட வாடகைத் தொகை ஆகியவற்றைக் குறிப்பிட்டு, ஒரு வாடகை ஒப்பந்தத்தை தயார் செய்யவேண்டும். அந்த ஒப்பந்தத்தில் முறையே நீங்களும், குத்தகைக்காரரும் சரியானபடி கையொப்பமிட்டிருக்கவேண்டும்.

## 2.4 கொள்முதல்கள்

உங்கள் வியாபாரக் கொள்முதல்கள் அனைத்திற்கும் நீங்கள் முறையான ஆவணம் மற்றும் பதிவுகளை வைத்திருக்க வேண்டும். கொள்முதலுகளுக்கானக் கட்டணங்களைச் செலுத்தும் போது நீங்கள் அதற்குரிய விலைப்பட்டியலைப் பெற்றிருக்க வேண்டும். உங்கள் வசதிக்காக கட்டணங்களை உங்கள் வியாபார வங்கி கணக்குகளின் மூலம் செலுத்துமாறு ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

இருப்பினும் சிறு தொகைகளாகப் பணம் செலுத்தி வாங்கப்படும் சிறிய அல்லது பல தரப்பட்ட கொள்முதல்களுக்கு, அந்த பொருட்களை கொள்முதல் செய்ததாகச் சுட்டிகாட்டும் வரவுசீட்டுகளைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். வாங்கப்பட்ட ஒரு பொருள் அல்லது சேவையின் விவரங்கள் வரவுசீட்டில் இல்லாவிட்டால் நீங்கள் அந்த பரிவர்த்தனையின் விவரங்களைக் குறிப்பிட வேண்டும்.

ஒரு வழங்குனர் அல்லது சேவை அளிப்பவர் வரவுசீட்டுகளை வழங்காவிட்டால் பணம் செலுத்திய நாள், கொள்முதலின் விவரம் மற்றும் விலை போன்றவற்றை உள்ளடக்கிய பண கட்டண உறுதிச்சீட்டு ஒன்றை கட்டாயமாக நீங்கள் தயாரிக்க வேண்டும். அது வழங்குனர் அல்லது சேவையளிப்பவரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். நீங்கள், வழங்குனர் அல்லது சேவையளிப்பவர் பெயர், நாள், சரக்குகள் அல்லது சேவைகளின் விவரம் மற்றும் செலுத்தப்பட்டத் தொகைக்காக ஒரு பதிவு புத்தகம் ஒன்றையும் பராமரிக்கவேண்டும்.

## 2.5 செலவுகள்

### (அ) பொது போக்குவரத்து செலவுகள்

வியாபார நோக்கங்களுக்காக செய்யப்பட்ட பொது போக்குவரத்து செலவுகள் வரி கழிவிற்கு தகுதியானவை. ஒவ்வொரு பயணத்திற்கும் பின்வரும் விவரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்:

(அ) நாள் மற்றும் சென்றயிடம்
(ஆ) போக்குவரத்து முறை
(இ) இச்செலவுக்கு ஆளாகும் நபர்
(ஈ) பயண நோக்கம்
(உ) செலவழித்தத் தொகை

உங்களுடைய பொது போக்குவரத்துச் செலவுகளை உறுதிப்படுத்தும் வாடகை உந்து வண்டி வரவுசீட்டுகள் போன்ற வரவுசீட்டுகளை வைத்திருக்க வேண்டும். நீங்கள் விரும்பினால் **பிற்சேர்க்கை** 1-ல் தரப்பட்டுள்ள மாதிரி மாதாந்திர பொது போக்குவரத்து செலவுகளின் பதிவைக் காணலாம்.

### (ஆ) பயணச் செலவுகள்

வியாபார நோக்கங்களுக்காக செய்யப்படும் வெளிநாட்டுப் பயணச் செலவுகள் வரி கழிவிற்குத் தகுதியானவை. செல்லும் ஒவ்வொரு பயணத்திற்கும் பின்வரும் விவரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்:

(அ) நாள் மற்றும் செல்லுமிடம்
(ஆ) போக்குவரத்து முறை
(இ) இச்செலவை ஏற்கும் நபர்
(ஈ) வெளிநாட்டுப் பயண நோக்கம் மற்றும் கால அளவு
(உ) செலவழித்தத் தொகை

உங்களுடைய பயணச் செலவுகளை உறுதிப்படுத்தும் வரவுசீட்டுகள் அல்லது பயண ஆவணங்கள் வைத்திருக்கப்பட வேண்டும். இதில் உணவு மற்றும் தங்குமிடத்திற்கான வரவுசீட்டுகளும் அடங்கும். நீங்கள் விரும்பினால் **பிற்சேர்க்கை 2**-ல் தரப்பட்டுள்ள மாதிரி மாதாந்திர பயணச் செலவுகளின் பதிவைக் காணலாம்.

**(இ) பொழுதுபோக்குச் செலவுகள்**

வியாபார நோக்கங்களுக்காக செய்யப்படும் பொழுதுபோக்குச் செலவுகள் வரி கழிவிற்குத் தகுதியானவை. பின்வரும் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்:

(அ) உபசரிப்பு நடந்த இடம் மற்றும் நாள்
(ஆ) பங்கேற்ற நபர்(கள்) பெயர்(கள்)
(இ) உபசரிப்பின் நோக்கம்
(ஈ) இச்செலவை ஏற்கும் நபர்
(உ) செலவழித்தத் தொகை

பொழுதுபோக்கு செலவுகளை உறுதிப்படுத்தும் விலைப்பட்டியல்கள் அல்லது வரவுசீட்டுகள் வைத்திருக்கப்பட வேண்டும். கடன் பற்று அட்டை சீட்டுகள் அல்லது மாதாந்திர கடன் பற்று அட்டை அறிக்கைகள் போன்றவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நீங்கள் விரும்பினால் **பிற்சேர்க்கை 3**-ல் தரப்பட்டுள்ள மாதிரி மாதாந்திர பொழுதுபோக்குச் செலவுகளின் பதிவைக் காணலாம்.

**(ஈ) ஊழியர் ஊதியம் மற்றும் முதலாளியின் ம.சே.நி சந்தாக்கள்**

ஊழியர்களின் வருமானத்தில், ஊதியம், சம்பளம், கொடையூதியம், தரகு மற்றும் அனுகூலங்கள் போன்றவை அடங்கும். போதுமான பதிவுகளை நீங்கள் வைத்திருக்க வேண்டும். எ.கா. வருமானச் செலவுகளுக்குக், கட்டண உறுதிச்சீட்டுகள் வருமான அறிக்கைகள் மற்றும் முதலாளியின் ம.சே.நி அறிக்கைகள் இதில் அடங்கும். இந்தப் பதிவுகளை நீங்கள் படிவம் IR8A-ஐ தயாரிக்கப் பயன்படுத்தலாம். பிற்சேர்க்கை 4-ல் தரப்பட்டுள்ள மாதிரி மாதாந்திர ஊழியர்கள் செலவுகளின் பதிவைக் காணலாம்.

## 2.6 <u>சொத்துகள்</u>

பொதுவாக வியாபாரத்திற்குச் சொத்துகள் உண்டு, இயந்திரம் மற்றும் சாதன வகை மற்றும் உந்து வண்டிகள் போன்றவை. ஒவ்வொரு சொத்திற்கும் நீங்கள் பின்வரும் விவரங்கள் மற்றும் ஆவணங்களை வைத்திருக்க வேண்டும்:

(அ) வாங்கிய நாள் மற்றும் விலை
(ஆ) விற்ற நாள் மற்றும் விற்ற விலை
(இ) வாங்கியவை அல்லது விற்றவைக்கான ஒப்பந்தப் படிகள்

வாங்கிய அல்லது வியாபாரத்தைத் தொடங்கிய நாளிலிருந்தே நிலையான சொத்துகளின் அட்டவணையை பராமரிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறீர்கள். இதில் வாங்கப்பட்டப் பொருட்கள், வாங்கிய நாட்கள் மற்றும் அவற்றின் விலை போன்றவற்றைப் பதிவு செய்யலாம். நீங்கள் விரும்பினால் **பிற்சேர்க்கை 5**-ல் தரப்பட்டுள்ள மாதிரி நிலையான சொத்துகளின் அட்டவணையைக் காணலாம்.

நிலையான சொத்துகளை வாங்க செலவழிக்கப்பட்ட தொகை முதலீட்டுத் தன்மை உடையதால் அதற்கு வரிக் கழிவு கிடையாது. இருப்பினும் நீங்கள் மூலதனக் கழிவுக் கோரலாம். 'மூலதனக் கழிவுகளை எப்படி கணக்கிடுவது' என்று தெரிந்து கொள்ள, 'வருமான வரிப் படிவத்தைச் சமர்ப்பித்தல்' என்ற தலைப்பின் கீழ் உள்ள பிரிவு 8- ஐ பார்க்கவும்.

## 2.7 <u>வியாபார இருப்பு</u>

விற்பனை நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும், உற்பத்தி செய்யப்படும், பெறப்படும் அல்லது வாங்கப்படும் அனைத்தும் வியாபார இருப்பு சரக்குகளாகும். கணக்கீட்டு ஆண்டின் முடிவில் இறுதி இருப்பின் சரியானத் தொகையை நிர்ணயிக்க இருப்பு எண்ணிக்கையைக் கணக்கிட வேண்டும். நீங்கள் விரும்பினால் **பிற்சேர்க்கை 6**-ல் தரப்பட்டுள்ள மாதிரி இருப்பு பட்டியலைக் காணலாம். நடப்பு ஆண்டின் இறுதி இருப்பு மறு ஆண்டின் ஆரம்ப இருப்பாகும்.

## 3. நான் வைத்திருக்கும் பதிவுகளை எவ்வாறு பயன்படுத்துவது?

நீங்கள் வைத்துள்ள வியாபாரப் பதிவு தொகுப்புகளை ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் கணக்குப் பட்டியலைத் தயாரிக்கப் பயன்படுத்தலாம்.

**4. சான்றளிக்கப்பட்டக் கணக்கு அறிக்கை என்பது என்ன?**

சான்றளிக்கப்பட்டக் கணக்கு அறிக்கைகள் என்பது உங்களால் முறையாகக் கையொப்பமிடப்பட்ட ஆதாய இழப்புக் கணக்கு இருப்பு நிலைக் குறிப்புகளாகும். இவை கணக்குகள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை காட்டுகின்றன. வழிகாட்டியின் **பிற்சேர்க்கை 7.1 முதல் 7.4** வரை காணவும்.

ஆதாய இழப்பு அறிக்கை என்பது அந்த ஆண்டில் ஏற்பட்ட வியாபார முடிவுகளைக் காட்டுகிறது. உங்களுடைய மொத்த விற்றுவரவு மொத்த செலவுகளை விட அதிகமாக இருந்தால் விளைவு நிகர ஆதாயமாகும். மொத்த செலவுகளானது மொத்தத் தொகையை விட அதிகமாக இருந்தால் விளைவு நிகர இழப்பாகும். நீங்கள் விரும்பினால் மாதிரி கணக்கு அறிக்கையைக் காணலாம். (படிவம் B-ல் தரப்பட்டுள்ள மாதிரிகளைப் பார்க்கவும்).

ஏற்பட்ட சில வியாபார செலவினங்கள் வரியில் கழிக்கப்படாதவையாக இருக்கலாம். வருமான வரிப் படிவத்தைச் சமர்ப்பிக்கத் தயாரிக்கும் போது கழிவிற்குரிய செலவினங்களுக்கு மட்டும் வரிக் கழிவு கோரப்பட்டுள்ளதா என்று நீங்கள் கட்டாயம் உறுதி செய்ய வேண்டும். மேல் விவரங்களுக்கு ‘வருமான வரிப் படிவத்தைச் சமர்ப்பித்தல்’ என்ற தலைப்பின் கீழ் உள்ள பகுதி 6.3-ஐ காணவும்.

இருப்பு நிலைக் குறிப்பு என்பது கணக்கீட்டு காலத்தின் இறுதியில் உங்களுடைய வியாபாரத்தின் சொத்துகள், கடன்கள் மற்றும் உரிமையாளரின் பங்கு போன்றவற்றைக் காட்டுகிறது.

கணக்கு அறிக்கையை முறையாக தயாரிப்பதற்கு ஒரு கணக்கியல் வல்லுனரை நீங்கள் அணுகலாம்.

## வருமான வரிப் படிவத்தைச் சமர்ப்பித்தல்

**1. நான் எனது வியாபாரத்தை இப்போது தான் தொடங்கி உள்ளேன். இது குறித்து நான் IRAS-க்கு தகவல் தெரிவிக்க வேண்டுமா?**

நீங்கள் தொழில் துவங்கியவுடன் IRAS-க்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. ஒரு வருமான வரிப் படிவம் (படிவம் B அல்லது B1) உங்களுக்கு அடுத்த ஆண்டின் தொடக்கத்தில், மார்ச் 15-க்கு முன்னர், அனுப்பி வைக்கப்படும். நீங்கள் உங்கள் வருமானத்தை அதில் தெரியப்படுத்தலாம்.

ஆயினும், நீங்கள் மார்ச் 15-க்கு முன்னர் வருமான வரிப் படிவத்தைப் பெறவில்லை என்றால், நீங்கள் “Registration Form for New Individual Taxpayer”-ஐ (புதிய தனிநபர் வரிச் செலுத்துபவருக்கான பதிவுப்படிவம்) எங்கள் வலைதளத்திலிருந்துப் பதிவிறக்கி, நிறைவு செய்து எங்களுக்கு தொலைப்பிரதி அல்லது அஞ்சல் மூலமாகத் திருப்பி அனுப்பலாம்.

**2. என்னுடைய தொழில் வருமானத்தின் மீது வரிவிதிப்பு எப்போது தொடங்கும்?**

நீங்கள் தொழில் தொடங்கிய ஆண்டில் கிடைக்கும் வருமானம் அதற்கு அடுத்த ஆண்டில் வரிவிதிப்புக்கு உட்படும். உதாரணமாக, உங்களின் 2007-ஆம் ஆண்டுக்கான வருமானம் 2008-ஆம் ஆண்டு வரிக்கு உட்படுத்தப்படும், அது மதிப்பீட்டு ஆண்டு 2008 என்று அழைக்கப்படும்.

**3. நான் எந்த கணக்கீட்டு காலத்தைப் பின்பற்ற வேண்டும்?**

உங்கள் ஆதாயம் அல்லது இழப்பைக் கணக்கிட பயன்படும் வணிக / வியாபார நடவடிக்கை காலமே, கணக்கீட்டுக் காலமாகும். நீங்கள் வியாபாரம் தொடங்கிய உடன் உங்கள் கணக்கீட்டுக் காலத்தை நீங்கள் நிர்ணயிக்க வேண்டும். பெரும்பாலும் கணக்கீட்டுக் காலம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31-ல் முடிவடையும்.

ஆயினும், உங்களது கணக்குகளை டிசம்பர் 31-ஐ தவிர்த்த வேறு நாட்களுக்கு நிர்ணயிக்க நீங்கள் முடிவு செய்திருந்தால், எ.கா. மார்ச் 31 என நீங்கள் கருதினால் உங்கள் கணக்கீட்டுக் காலங்களும் அதற்கேற்ற வரி மதிப்பீட்டு ஆண்டுகளும் கீழ் கண்டவாறு :

| | | |
|---|---|---|
| 1வது கணக்கீட்டு காலம் | 01.04.06 முதல் 31.03.07 | வரி மதிப்பீட்டு ஆண்டு 2008 |
| 2வது கணக்கீட்டு காலம் | 01.04.07 முதல் 31.03.08 | வரி மதிப்பீட்டு ஆண்டு 2009 |
| 3வது கணக்கீட்டு காலம் | 01.04.08 முதல் 31.03.09 | வரி மதிப்பீட்டு ஆண்டு 2010 |
| | இது போல் தொடரும் | |

**4. நான் எனது வருமான கணக்கை வெளிநாட்டு நாணயத்தில் வைத்திருந்தால்?**

உங்கள் கணக்கீடுகள் சிங்கப்பூர் நாணயத்தைத் தவிர்த்த மற்ற நாணயத்தில் கணக்கிடப்பட்டிருந்தால், நீங்கள் அதை வரி அதிகாரியிடம் சமர்ப்பிக்க நேரிட்டால், சான்றளிக்கப்பட்டக் கணக்கறிக்கைகளை

முறையே அந்த நாணயத்தில் தயாரித்து வைத்திருக்க வேண்டும். எனினும், உங்கள் வரிப் படிவத்தில் 4 வரிக் கணக்கறிக்கையின் விவரத்தைச் சிங்கப்பூர் நாணயத்தில் தெரிவிக்க வேண்டும்.

சராசரி மாற்று விகிதப் பட்டியல், IRAS வலைத்தளத்தில; (http://www.iras.gov.sg) 'Average Exchange Rates'-ன் கீழ் கிடைக்கப்பெறும். சரியான மாற்று விகிதங்கள் கிடைக்காத நிலையில், இந்த விகிதங்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். நீங்களே சராசரி மாற்று விகிதங்களைத் தயாரித்துக் கொள்ள வசதியாக MAS (சிங்கப்பூர் நாணய வாரியம்) வலைத்தளத்தில் (http://www.mas.gov.sg) படிவம் ஒன்று உள்ளது.

## 5. நான் எனது தொழில் வருமானத்தை எங்கே தெரியப்படுத்துவது?

ஒரு சுயதொழில் செய்யும் நபராக, உங்களின் தொழில் வரவு உங்களின் சொந்த வருமானத்தின் ஒரு பகுதியாக கருதப்படும் மற்றும் தனிநபர் வருமான வரிகளின் அடிப்படையில் வரிக்கு உட்படுத்தப்படும்.

ஒரு தனி உரிமையாளரான, நீங்கள் உங்கள் தொழில் வருமானத்தை உங்களின் தனிநபர் வருமான வரிப் படிவத்தில் (படிவம் B) "சுய தொழிலின்" கீழ்வரும், வர்த்தகம், வியாபாரம், தேர்ச்சித் தொழில் அல்லது தொழில் என்ற பிரிவின் கீழ் தெரியப்படுத்தவேண்டும்.

உங்களுக்கு படிவம் B1 அனுப்பப்பட்டிருந்தால் உங்களது தொழில் வருமானத்தைப் 'பிற வருமானம்' என்ற தலைப்பில் பதிவு செய்து விவரங்களை **பிற்சேர்க்கை 1**-ல் அளிக்கலாம்.

ஒரு கூட்டுத்தொழிலுக்கு, முன்னோடி பங்காளி, கூட்டுத் தொழிலின் வருமானத்தைப் படிவம் P-யில் தாக்கல் செய்யவேண்டும். ஒரு கூட்டுத் தொழிலுக்கு, நீங்கள் உங்கள் கூட்டுத் தொழிலின் வருமானத்தை, உங்கள் தனிநபர் வருமான வரிப் படிவத்தில் (படிவம் B) "வர்த்தகம், தேர்ச்சித் தொழில் அல்லது தொழில்" என்ற பிரிவின் கீழ் தெரியப்படுத்த வேண்டும். கூட்டுத் தொழிலிலிருந்து கிடைத்த சம்பளம், ம. சே. நி. வட்டி, வாடகை மற்றும் இதர சிங்கப்பூர் வருமானத்தின் மொத்தத் தொகையாகும். வர்த்தகம், தேர்ச்சித் தொழில் அல்லது தொழில் என்ற பிரிவின் கீழ் அறிக்கைப்படுத்த வேண்டும். கூட்டுத்தொழிலின் வருமானத்தில் உங்கள் பங்கு என்பது பங்காளிகளுக்கிடையே வகுக்கக்கூடிய ஆதாயம் / இழப்பு, கூட்டுத் தொழிலிலிருந்து கிடைத்த சம்பளம், ம.சே.நி, வட்டி, வாடகை மற்றும் இதர சிங்கப்பூர் வருமானத்தின் மொத்தத் தொகையாகும்.

## 6. நான் எவ்வாறு எனது தொழில் வருமானத்தை தெரியப்படுத்துவது?

நீங்கள் உங்கள் சுய/கூட்டுத் தொழில் வருமானத்தை 4-வரி அறிக்கையாக பின்வருமாறு தெரியப்படுத்த வேண்டும்.

விற்றுவரவு (மொத்த விற்பனை/வருமானம்/எடுத்தத் தொகை)
மொத்த ஆதாயம் / இழப்பு
அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகள்
சரிசெய்யப்பட்ட ஆதாயம் / இழப்பு

உங்கள் சுய தொழிலின் விற்றுவரவு $100,000-க்கும் குறைவாக இருந்தால், நீங்கள் 2-வரி அறிக்கையை சமர்ப்பித்தால் போதும், அதாவது விற்றுவரவு மற்றும் சரிசெய்யப்பட்ட ஆதாயம் / இழப்பு.

### 6.1 விற்றுவரவு

விற்றுவரவு என்பது, உங்கள் வியாபாரச் செலவுகள் எதனையும் கழிப்பதற்கு முந்திய உங்களது வியாபாரத்தின் மொத்த வரவுகளாகும். மொத்த வரவுகள் என்பது, பெற்ற பெற வேண்டிய கட்டணங்களை உள்ளடக்கியதாகும். நீங்கள் பொருள் சேவை வரிக்குப் பதிந்து கொண்ட நபரென்றால் உங்களின் மொத்த வரவு என்பது வாடிக்கையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டப் பொருள் சேவை வரியைக் (உற்பத்தி வரியை) கழித்தபின் கிடைக்கும் தொகையாகும். பின்வருவன விற்றுவரவில் அடங்கும்:

- விற்பனைக்கும் செய்யப்பட்ட வேலைக்குமான அனைத்து கட்டணங்கள்
- அளித்த சேவைகளுக்கானக் கட்டணம் மற்றும் தரகு

உங்கள் தொழிலின் விற்றுவரவு $500,000 அல்லது அதற்கு மேல் இருந்தால், நீங்கள் சான்றளிக்கப்பட்ட கணக்குகளின் அறிக்கையை உங்கள் தனிநபர் வருமான வரிப் படிவத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.

உங்கள் தொழிலின் விற்றுவரவு $500,000-க்கு குறைவாக இருந்தால், நீங்கள் சான்றளிக்கப்பட்ட கணக்குகளின் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. இருப்பினும் நீங்கள் அதை தயார்படுத்தி வைத்திருக்கவேண்டும்.

நீங்கள் உங்கள் விற்றுவரவு தொகையைக் கருதாமல் தொழில் பரிமாற்றங்களின் பதிவுகளை முறையாக வைத்திருக்கவேண்டும். எங்களின் கோரிக்கையின் பேரில், நீங்கள் அவற்றை எங்களிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

## 6.2 மொத்த ஆதாயம் / இழப்பு

விற்றுவரவு தொகையால் விற்கப்பட்ட சரக்குகளின் அடக்க விலையைக் கழித்த பின் பெறும் தொகையையே மொத்த ஆதாயம் / இழப்பு குறிக்கிறது. உங்களுடைய வியாபாரம் வெறும் சேவைகள் தொடர்பானதாக மட்டும் இருந்தால், உங்களின் மொத்த ஆதாயம் விற்றுவரவாகக் கருதப்படும்.

<u>எடுத்துக்காட்டு 1:</u>

| | $ | $ |
|---|---|---|
| விற்றுவரவு | | 30,000 |
| கழிக்க:<u>விற்ற சரக்குகளின் அடக்க விலை</u> | | |
| ஆரம்ப சரக்கு இருப்பு | 10,000 | |
| கொள்முதல் | 5,000 | |
| இறுதி இருப்பு | (7,000) | |
| விற்ற சரக்குகளின் அடக்க விலை | | 8,000 |
| மொத்த ஆதாயம் / இழப்பு | | 22,000 |

நீங்கள் பொருள் சேவை வரிக்கு பதிந்து கொண்ட நபராகயிருந்தால் மொத்த கொள்முதலில் வியாபாரக் கொள்முதலுக்காகச் செலுத்திய பொருள் சேவை வரியைத் தவிர்க்க வேண்டும்.

## 6.2 அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகள்

அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகள், செலவுகள் மற்றும் மூலதனக் கழிவுகள் மொத்தமாக மற்றும் தனிப்பட்டதாக உங்கள் வருமானத்தின் உற்பத்தியில் ஏற்பட்டதை உள்ளிடுகிறது. சுயத் தொழில் புரியும் ஒருவருக்கு அனுமதிக்கக் கூடிய மற்றும் அனுமதிக்க முடியாத செலவுகளின் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

| அனுமதிக்கக் கூடிய தொழில் செலவுகள் | அனுமதிக்க முடியாத தொழில் செலவுகள் |
|---|---|
| ஊழியர் செலவுகள் | |
| • ஊழியர்கள் சம்பளம், கொடையூதியம், அனுகூலங்கள்<br>• முதலாளி செலுத்திய கட்டாய ம.சே.நி சந்தா<br>• ஆட்குறைப்புத் தொகை<br>• ஊழியர்களுக்கான காப்புறுதி<br>• மருத்துவச் செலவுகள், ஊழியர்களின் மொத்த ஊதியத்திலிருந்து கூடிய பட்சம் 1% (நீங்கள் முதலாளியாக இருந்து, உடன் எடுத்துச் செல்லும் மருத்துவச் சலுகைத் திட்டத்தை அல்லது மாற்றிவிடப்படக் கூடிய மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைபடுத்தியிருந்தால் 2%) | • முதலாளி செலுத்தியச் சட்டப்பூர்வ வரம்புக்கு மேலான ம.சே.நி சந்தாக்கள்<br>• ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 1%-க்கு மேற்பட்ட மருத்துவச் செலவுகள் (நீங்கள் முதலாளியாக இருந்து, உடன் எடுத்துச் செல்லும் மருத்துவச் சலுகைத் திட்டத்தை அல்லது மாற்றிவிடப்படக் கூடிய மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைபடுத்தியிருந்தால் 2%)<br>• உங்கள் சொந்த சம்பளம், கொடையூதியம், அனுகூலங்கள் மற்றும் மெடிசேவ் / ம.சே.நி சந்தா<br>• உங்கள் சொந்த தனிப்பட்டச் செலவுகள், மருத்துவக் கட்டணங்கள், வருமான வரி, காப்புறுதி மற்றும் நன்கொடைகள் |
| அடிப்படைச் செலவுகள் | |
| • வியாபாரத்திற்கான வாடகை, பயனீட்டு மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள்<br>• எழுதுபொருட்கள் மற்றும் அஞ்சல் செலவுகள்<br>• விளம்பரச் செலவுகள்<br>• தொழில் மனை, சாதனம் மற்றும் இயந்திர | • தனிப்பட்ட செலவுகளான உணவு, வீட்டுச் செலவுகள் மற்றும் உங்களுக்கு, குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கான கேளிக்கைச் செலவுகள்<br>• உரிமைக்கட்டணம், பதிவுக் கட்டணம், |

| | |
|---|---|
| பராமரிப்புச் செலவுகள்<br>• உந்து மிதிவண்டிகள், ஏற்றும் ஊர்திகள், கூண்டூர்திகள், பேருந்துகள், சரக்குந்துகள் மற்றும் 1998 ஏப்ரல் 1-ஆம் நாளன்று வாகனச் சான்றிதழ் (COE) பெற்ற Q-தகடு வண்டிகள் போன்ற இன்றுந்துகளைப் பேணுதற்கானச் செலவுகள்<br>• வியாபார நிமித்தமாக பொது போக்குவரத்தில் மேற்கொள்ளப்படும் பயணச் செலவுகள்<br>• தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்டச் சொத்தின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகள்<br>• கணக்கீட்டு ஆண்டில் வாராக் கடனாக ஆகிவிடும் வியாபாரக் கடன்கள்<br>• தொழில் பயன்பாட்டுக்காக வாங்கப்பட்ட நிலையான சொத்துக்களின் மூலதனக் கழிவுகள் | பெயர்பலகைக் கட்டணம் போன்ற வியாபாரத் துவக்க செலவுகள்<br>• தனியார் உந்து ஊர்திகளின் பராமரிப்பு செலவுகள்<br>• உங்கள் வீட்டிலிருந்து சென்று வருவதற்கானப் பயணக் கட்டணங்கள்<br>• 1998 ஏப்ரல் 1 அல்லது அதற்கு பிறகு வாகனச் சான்றிதழ் (COE) பெற்ற Q-தகடு வண்டிகள் மற்றும் தனியார் வாடகை வண்டிகள், தனியார் வண்டிகள் (E அல்லது S-தகடு வண்டிகள்) தொடர்பான செலவுகள்<br>• வியாபாரத்திற்காக வாங்கப்பட்ட நிலையான சொத்துக்களின் விலை*<br>• **நிலையான சொத்துக்களின் தேய்மானம் ***<br>• சீரமைப்பு செலவுகள் |

*மேற்கண்ட செலவுகளுக்கு நீங்கள் மூலதனக் கழிவுகள் கோரலாம். மூலதனக் கழிவுகள் பற்றிய எடுத்துக்காட்டுகளுக்குப் பகுதி 8 முதல் 10 வரைப் பார்க்கவும்.

| நிதி மற்றும் நிபுணத்துவச் செலவுகள் | |
|---|---|
| • வியாபாரத்திற்குப் பயன்படுத்துவதற்காக வாங்கியப் பணத்திற்கான வட்டி<br>• தவணை முறை வட்டி<br>• கணக்காளர்களுக்கான கட்டணங்கள்<br>• வர்த்தகக் கடன்களைத் திரும்பிப் பெற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கான சட்டம் சார்ந்த கட்டணங்கள் மற்றும் குத்தகை காலத்தை புதுப்பித்தல் | • சொந்த செலவுகளுக்காக வாங்கப்பட்ட கடனுக்கான வட்டி<br>• திருப்பிச் செலுத்தியக் கடன்கள்<br>• புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கானப் பத்திரச் செலவு மற்றும் சட்டம் சார்ந்த கட்டணங்கள்<br>• அபராதம் மற்றும் தண்டனைத் தொகை<br>• மூலதனப் பங்களிப்பு அல்லது மீட்பு |

நீங்கள் பொருள் சேவை வரிக்கு பதிந்து கொண்ட நபராகயிருந்தால் மொத்த அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகளில் வியாபாரச் செலவுகளுக்காகச் செலுத்தியப் பொருள் சேவை வரியைத் தவிர்க்க வேண்டும்.

### 6.4 <u>சரிசெய்யப்பட்ட ஆதாயம் / இழப்பு</u>

சரிசெய்யப்பட்ட ஆதாயம் / இழப்பு, மொத்த ஆதாயம் இழப்பிலிருந்து அனுமதிக்கப்படக்கூடிய தொழில் செலவுகள் மற்றும் கோரப்பட்டப் பிற மூலதனக் கழிவுகளைக் கழித்தபின் கிடைக்கும் தொகையைக் குறிக்கிறது.

## 7. மூலதனக் கழிவுகள் என்றால் என்ன?

வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் தகுதிபெறும் சொத்துக்களுக்குப், பயன்பாட்டின் காரணமாக ஆண்டுதோறும் ஒரு மதிப்புத் தொகை குறைப்பை நீங்கள் கோரலாம். இந்த நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக உட்படுத்தப்பட்டத் தொகை மூலதனத் தன்மை உடையது, நீங்கள் இந்த செலவுகளைக் கோருவதற்கு அனுமதியில்லை. எனினும், தொழிலுக்காக வாங்கிய, பயன்படுத்திய நிலையானச் சொத்தின் தேய்மானத்திற்கு நீங்கள் மூலதனக் கழிவுகளைக் கோரலாம்.

நீங்கள் பொருள் சேவை வரிக்கு பதிந்து கொண்ட நபராகயிருந்தால், மூலதனக் கழிவுகளைக் கணக்கிடும் போது, சொத்துக்களின் கொள்முதலுக்காகச் செலுத்தியப் பொருள் சேவை வரியைத் தவிர்க்க வேண்டும்.

## 8. நான் எவ்வாறு மூலதனக் கழிவுகளைக் கணக்கிடுவேன்?

மூலதனக் கழிவுகளைக் கணக்கிடுவதற்கு மூன்று முறைகள் உள்ளன:

### 8.1 ஓராண்டுக் கழிவுத் தொகை

சொத்தின் முழுச் செலவும் ஓராண்டில் மூலதனக் கழிவாகக் கோரப்படும். இது கணிப்பொறிகள், கணிப்பொறி தொடர்பான சாதனங்கள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் பிற செயல் இயந்திரங்களுக்கான மூலதனச் செலவுத் தொகைக்கும் பொருந்தும்.

நிலையான சொத்துக்களின் விலை ஒவ்வொன்றும் $1,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அத்தகைய சொத்துக்களுக்கான ஓராண்டுக் கழிவுத் தொகைக்கான கோருதல் ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டுக்கும் $30,000-க்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

### 8.2 மூன்றாண்டுக் கழிவுத் தொகை

பொதுவாக, கொள்முதல் செய்யப்படும் அனேக நிலையான சொத்துகளும் மூன்றாண்டுக் கழிவுத் தொகைக்குத் தகுதியுடையனவாகும் (உந்து வண்டிகள், உந்து மிதி வண்டிகள் மற்றும் 3000 கிலோகிராம் அல்லது அதற்கு குறைவான இலகுரக சரக்கு ஊர்திகளைத் தவிர). சொத்தின் முழுச் செலவும் மூன்றாண்டுகளுக்கு மேலான மூலதனக் கழிவாகக் கோரப்படும். <u>எடுத்துக்காட்டு 2</u>: 2007-ஆம் ஆண்டில், $3000-க்கு ஒரு குளிர் சாதனப் பெட்டி கொள்முதல் செய்யப்பட்டது.

நீங்கள் மூலதனக் கழிவாக ஒவ்வொரு ஆண்டுக்கும் $1,000 ($3,000/3) கோரலாம், பின் வருமாறு : -

| வரி மதிப்பீட்டு ஆண்டு | ஆண்டுத் தொகை ($) |
|---|---|
| 2008 | 1,000 |
| 2009 | 1,000 |
| 2010 | 1,000 |

குளிர்சாதன பெட்டிக்கானச் செலவு 3 ஆண்டுகளில் முழுமையாகக், கழிவாகக் கோரப்பட்டதால், வரி மதிப்பீட்டு ஆண்டு 2011-லிருந்து இக்கழிவைக் கோர முடியாது.

### 8.3 சொத்தின் இயக்க ஆயுளின் மீதான கழிவுத் தொகை

இந்த முறை, கூண்டூர்திகள், ஏற்றும் ஊர்திகள், இருப்புத்தடச் சரக்கு வண்டிகள், பேருந்துகள் மற்றும் சரக்குந்துகள் போன்ற உந்து ஊர்திகளுக்கும் மற்றும் 1998 ஏப்ரல் 1-க்கு முன் வாகனச் சான்றிதழ் (COE) பெற்ற Q-தகடு வண்டிகளுக்கும் பொருந்தும். மூலதனக் கழிவுகள் தனியார் உந்து ஊர்திகளுக்குப் **<u>பொருந்தாது</u>** (எ.கா. S-தகடு வண்டிகள்).

<u>கொள்முதல் ஆண்டில்</u>, நீங்கள் துவக்கக் கழிவாக சொத்தின் விலையில் 20%-ஐக் கோரலாம். இதனைத் தொடரும் ஆண்டுகளில், விலையிலிருந்து 80%-ஐ எடுத்து அதை இயங்கும் ஆயுளிலிருந்து வகுத்து கணக்கிடப்பட்டதை ஆண்டுக் கழிவாகக் கோரலாம்

| சொத்துகள் | இயக்க ஆயுள் (ஆண்டுகளின் எண்ணிக்கை) |
|---|---|
| வாடகை உந்து வண்டிகள் | 5 |
| பேருந்துகள், சரக்குந்துகள், இருப்புத்தடச் சரக்கு வண்டிகள், மற்றொரு வண்டியால் இழுத்துச் செல்லப்படும் சரக்கு வண்டிகள் மற்றும் கூண்டூர்திகள் | 6 |
| 1998 ஏப்ரல் 1-க்கு முன் வாகனச் சான்றிதழ் (COE) பெற்ற Q-தகடு வண்டிகள் | 6 |
| ஊர்ந்து மிதிவண்டிகள் மற்றும் மிதிவண்டிகள் | 8 |

<u>தொடர்ந்து வரும் ஆண்டுகளில்</u>, சொத்தின் இயக்க ஆயுள் வரை தொடர்ந்து நீங்கள் ஆண்டுத் தொகையைக் கோரலாம். ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுத் தொகை ஒரே அளவிலாக வழங்கப்படும்.

நீங்கள் வைத்திருக்க வேண்டிய ஆவணங்களில் சில:

(அ) கொள்முதல் ஒப்பந்தங்கள் அல்லது விலைப்பட்டியல்களின் அசல்
(ஆ) தவணை முறை வட்டி ஒப்பந்தப் பத்திரங்கள்
(இ) மூலதனக் கழிவு / தேய்மான அட்டவணை

<u>எடுத்துக்காட்டு 3</u>: 2007-ல் $45,000-க்கு ஒரு கூண்டுர்தி வாங்கப்பட்டது. ஆயுட் காலம்: 6 ஆண்டுகள்.

| | வரி மதிப்பீட்டு ஆண்டு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | **மொத்தம்** |
| துவக்கக் கழிவு (45,000-ல் 20%) | 9,000 | --- | --- | --- | --- | --- | 9,000 |
| ஆண்டுத் தொகை (80%x 45,000/6) | 6,000 | 6,000 | 6,000 | 6,000 | 6,000 | 6,000 | 36,000 |
| **மொத்த மூலதனக் கழிவு** | **15,000** | **6,000** | **6,000** | **6,000** | **6,000** | **6,000** | **45,000** |

கூண்டுர்திக்கான மூலதனக் கழிவு தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்குக் கோரப்பட்டுள்ளதால், மதிப்பீட்டு ஆண்டு 2014 முதல் மூலதனக் கழிவை கோர முடியாது.

## 9 நான் தவணை முறையில் சொத்துக்களை வாங்கியிருந்தால்?

தவணை முறையில் வாங்கிய சொத்தின் விலையை நீங்கள் மூலதனக் கழிவாகக் கோரலாம். ஆயினும், நீங்கள் மூலதனக் கழிவைக் கணக்கிடும் போது தவணை முறை வட்டியைத் தவிர்க்கவும். ஆதாய இழப்பு அறிக்கையில் தவணை முறை வட்டியை செலவாகக் கோரலாம்.

தவணை முறையில் மூலதனக் கழிவைக் கணக்கிடும் 3 முறைகளை கீழ் காணும் எடுத்துக்காட்டுகள் விளக்குகின்றன :

### 9.1 <u>ஓராண்டுக் கழிவுத் தொகை</u>

ஒரு ஆண்டில் தவணை பணமாக நீங்கள் செலுத்தும் 100% அசல் தொகையை மூலதனக் கழிவாகக் கோரலாம்.

<u>எடுத்துக்காட்டு 4</u>: தவணை முறையில் 2007-ஆம் ஆண்டில் ஒரு கணினி $3,000-க்கு வாங்கப்பட்டது:

| | | |
|---|---|---|
| ரொக்க விலை | : | $3,000 |
| முன் பணம் | : | $ 300 |
| தவணை முறை வட்டி | : | $ 600 |
| தவணை முறை விலை | : | $3,600 |
| ஒவ்வொரு தவணை தொகை | : | $ 275 |
| மொத்த தவணைகள் | : | 12 |
| முதல் ஆண்டில் செலுத்திய 4 தவணைகள் | : | 4 x $275 = $1,100 |
| இரண்டாவது ஆண்டில் செலுத்திய 8 தவணைகள் | : | 8 x $275 = $2,200 |
| முதல் ஆண்டில் கட்டிய தவணை முறை வட்டி | : | $600/12 x 4 = $ 200 |
| இரண்டவது ஆண்டில் கட்டிய தவணை முறை வட்டி | : | $600/12 x 8 = $ 400 |

| | வரி மதிப்பீட்டு ஆண்டு | | |
|---|---|---|---|
| | 2008 | 2009 | மொத்தம் |
| முன் பணம் | 300 | --- | 300 |
| கூட்ட: செலுத்திய மொத்தத் தவணைகள் | 1,100 | 2,200 | 3,300 |
| கழிக்க: தவணை முறை வட்டி | 200 | 400 | 600 |
| **ஆண்டுத் தொகை** | **1,200** | **1,800** | **3,000** |

கணினிக்கான செலவு முதல் இரண்டு ஆண்டுகளில் முழுமையாகக் கழிவாகக் கோரப்பட்டதால், வரி மதிப்பீட்டு ஆண்டு 2010-லிருந்து மூலதனக் கழிவைக் கோர முடியாது.

### 9.2 மூன்றாண்டுக் கழிவுத் தொகை

நீங்கள் அந்த ஆண்டில் செலுத்திய மொத்த அசல் தொகையிலிருந்து தவணை முறை வட்டியை கழித்த பின் கிடைக்கும் தொகையை 3 ஆண்டுகளுக்கு வகுத்து கணக்கிடப்பட்டதை, நீங்கள் கழிவாகக் கோரலாம்.

எடுத்துக்காட்டு 5: 2007-ல் $3,000-க்கு ஒரு குளிர்சாதனப் பெட்டி, எடுத்துக்காட்டு 4-ல் காணப்பட்டுள்ள முறையின்படி வாங்கப்பட்டது. (அதாவது $1,200 மற்றும் $1,800 எடுத்துக்காட்டு 4-ல் உள்ளப்படி) மூன்று ஆண்டுகளுக்கான ஆண்டுத் தொகை கீழ் கண்டவாறு கணக்கிடப்படுகிறது: -

| | வரி மதிப்பீட்டு ஆண்டு | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 | |
| ஆண்டுத் தொகை ($1,200/3) | 400 | 400 | 400 | --- | 1,200 |
| ஆண்டுத் தொகை ($1,800/3) | --- | 600 | 600 | 600 | 1,800 |
| **ஆண்டுத் தொகை** | **400** | **1,000** | **1,000** | **600** | **3,000** |

### 9.3 சொத்தின் இயக்க ஆயுளின் மீதான கழிவுத் தொகை

எடுத்துக்காட்டு 6: 2007-ல் ஒரு சரக்குந்து $45,000-க்கு வாங்கப்பட்டது::

| | | |
|---|---|---|
| தவணை முறை தொடங்கும் நாள் | : | 28.9.07 |
| ரொக்க விலை | : | $45,000 |
| முன் பணம் | : | $15,000 |
| தவணை முறை வட்டி | : | $ 3,000 |
| மொத்த தவணைகள் | : | 24 |
| ஒவ்வொரு தவணை தொகை | : | $1,375 |
| 2007-ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட தவணைகள் | : | 4 |
| 2008-ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட தவணைகள் | : | 12 |
| 2009-ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட தவணைகள் | : | 8 |
| இயக்க ஆயுள் | : | 6 வருடங்கள் |

| | வரி மதிப்பீட்டு ஆண்டு | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | |
| முன் பணம் | 15,000 | --- | --- | --- | --- | --- | 15,000 |
| கூட்ட: செலுத்தப்பட்டத் தவணைகள்[1] | 5,500 | 16,500 | 11,000 | --- | --- | --- | 33,000 |
| கழிக்க: தவணை முறை வட்டி[2] | 500 | 1,500 | 1,000 | --- | --- | --- | 3,000 |
| தவணை முறை வட்டியைத் தவிர்த்து கட்டப்பட்டத் தொகை | 20,000 | 15,000 | 10,000 | --- | --- | --- | 45,000 |
| துவக்கக் கழிவு[3] | 4,000 | 3,000 | 2,000 | --- | --- | --- | 9,000 |
| ஆண்டுத் தொகை[4] | 6,000 | 6,000 | 6,000 | 6,000 | 6,000 | 6,000 | 36,000 |
| **மொத்த மூலதனக் கழிவு** | **10,000** | **9,000** | **8,000** | **6,000** | **6,000** | **6.000** | **45,000** |

[1] செலுத்தப்பட்டத் தவணைகள் = செலுத்தப்பட்டத் தவணைகளின் எண்ணிக்கை x $1,375

[2] தவணை முறை வட்டி = செலுத்தப்பட்டத் தவணைகளின் எண்ணிக்கை x $3,000/24

[3] துவக்கக் கழிவு = 20% x (தவணை முறை வட்டியைத் தவிர்த்துகட்டப்பட்டத் தொகை)

[4] ஆண்டுத் தொகை = 80% x ரொக்க விலை / இயக்க ஆயுள்

## 10. நான் என்னுடைய நிரந்தர சொத்துக்களை விற்றாலோ அழித்தாலோ என்ன ஆகும்?

ஏற்கனவே மூலதனக் கழிவுப் பெற்ற உங்கள் நிரந்தர சொத்துக்களை விற்றாலோ அழித்தாலோ நீங்கள் சமன் செய்யும் கழிவு (ச க) அல்லது சமன் செய்யும் தொகையைக் (ச தொ) கணக்கிட வேண்டும். பெயர்த்தெழுதப்பட்ட ஏட்டு மதிப்புக்கும் (பெ ஏ ம) விற்கப்பட்டோ அழிக்கப்பட்டோ கிடைத்தப் பணத்திற்கும் உள்ள வித்தியாசமே சமன் செய்யும் கழிவு அல்லது சமன் செய்யும் தொகை என்பதாகும்.

சொத்தின் அசல் விலையிலிருந்து, ஏற்கனவே அளிக்கப்பட்ட மூலதனக் கழிவைக் கழித்தப் பின் கிடைப்பதே பெயர்த்தெழுதப்பட்ட ஏட்டு மதிப்பாகும்.

### 10.1 <u>சமன் செய்யும் கழிவு (ச க)</u>

சொத்து விற்கப்பட்டு, அதன் பெயர்த்தெழுதப்பட்ட ஏட்டு மதிப்பு, விற்பனையில் கிடைத்த பணத்தை விட கூடுதலாக இருந்தால் இதுவே சமன் செய்யும் கழிவாகும். இதற்கு வரிக் கழிவு உண்டு.

| <u>எடுத்துக்காட்டு 7:</u> | $ |
|---|---|
| சொத்தின் விலை | 6,000 |
| கழிக்க: அனுமதிக்கப்பட்ட மொத்த மூலதனக் கழிவுகள் | 4,000 |
| 31.12.06 அன்று பெ ஏ ம | 2,000 |
| கழிக்க: 2007-ல் விற்பனைத் தொகை | 1,000 |
| சமன் செய்யும் கழிவு (ச க) | 1,000 |

விற்பனைத் தொகை பெயர்த்தெழுதப்பட்ட ஏட்டு மதிப்பை விட குறைவாக இருப்பதனால், நீங்கள் $1,000-யை சமன் செய்யும் கழிவாக, வரி மதிப்பீட்டு ஆண்டு 2008-ல் கோரலாம்.

### 10.2 <u>சமன் செய்யும் தொகை (ச தொ)</u>

சொத்தின் விற்பனைப் பணம் அதன் பெயர்த்தெழுதப்பட்ட ஏட்டு மதிப்பை விட கூடுதலாக இருந்தால், இதுவே சமன் செய்யும் தொகையாகும். இது வரி விதிப்பிற்கு உட்பட்டது.

| <u>எடுத்துக்காட்டு 8:</u> | $ |
|---|---|
| சொத்தின் விலை | 6,000 |
| கழிக்க: அனுமதிக்கப்பட்ட மொத்த மூலதனக் கழிவுகள் | 4,000 |
| 31.12.06 அன்று பெ ஏ ம | 2,000 |
| கழிக்க: 2007-ல் விற்பனைத் தொகை | 3,000 |
| சமன் செய்யும் தொகை (ச தொ) | 1,000 |

ஆயினும், சமன் செய்யும் தொகை ஏற்கனவே கோரப்பட்ட மூலதனக் கழிவுத் தொகைக்குக் கட்டுப்படுத்தப்படும்.

| <u>எடுத்துக்காட்டு 9:</u> | $ |
|---|---|
| சொத்தின் விலை | 3,000 |
| கழிக்க: அனுமதிக்கப்பட்ட மொத்த மூலதனக் கழிவுகள் | 1,000 |
| 31.12.06 அன்று பெ ஏ ம | 2.000 |
| கழிக்க: 2007-ல் விற்பனைத் தொகை | 3,500 |
| | 1,500 |
| சமன் செய்யும் தொகை (அனுமதிக்கப்பட்ட மொத்த மூலதனக் கழிவு அளவுக்கே கட்டுப்படுத்தப்படும்) | 1,000 |

### 11. எனக்கு தொழில் இழப்புகள் ஏற்பட்டால்?

அனுமதிக்கக்கூடிய செலவுகளின் கழிவிற்குப் பிறகு உங்களுக்குத் தொழில் இழப்பு ஏற்பட்டால் இந்த இழப்பு மற்றும் கோரப்பட்ட மூலதனக் கழிவுகள் அதே ஆண்டிற்கான உங்களின் மற்ற வருவாய்களான வேலை, வட்டி, லாப ஈவு மற்றும் வாடகை வருமானம் போன்றவற்றுக்கு எதிராக சரியீடு செய்யப்படலாம்.

உங்கள் பிற வருமானங்கள் உங்களின் தொழில் இழப்பை சரியீடு செய்வதற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கலாம், நீங்கள் உங்கள் மீதமுள்ள தொழில் இழப்புகள் மற்றும் மூலதனக் கழிவுகளை அடுத்த ஆண்டின் வருமானத்திற்கு எதிராகச் சரியீடு செய்துக்கொள்ளலாம். உங்கள் தொழில் முடிவுற்றால், நீங்கள் உங்கள் தொழில் இழப்பின் மீதத்தை அடுத்த ஆண்டிற்கு எடுத்துச் செல்லமுடியும், ஆனால் உங்கள் மூலதனக் கழிவை எடுத்துச் செல்ல இயலாது..

மேற் கூறப்பட்டுள்ள இந்த நடைமுறை வாகன வாடகை நிறுவனங்களுக்கோ ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்களுக்கோ பொருந்தாது. இந்த நிறுவனங்களுக்கு இழப்பு ஏற்பட்டால் எஞ்சி நிற்கும் தொழில்

இழப்புகளும், மூலதனக் கழிவுகளும் எதிர்வரும் வரி மதிப்பீட்டு ஆண்டுகளில் அதே வியாபாரத்தில் கிடைக்கும் வருமானத்திற்கு எதிராகக் கழித்துக் கொள்ளப்படலாம். இந்த நிறுவனங்களின் வியாபாரம் முடிவுற்றால், எஞ்சி நிற்கும் தொழில் இழப்புகளும் மூலதனக் கழிவுகளும் புறக்கணிக்கப்படும். மேல் விவரங்களுக்கு, IRAS வலைத்தளத்தில, E-Tax Guide-ல் 'Changes in tax treatment of Motor Cars consequent to Vehicle Tax Rationalisation' என்ற தலைப்பைப் பார்க்கவும்.

திருமணமான தம்பதியர் ஒருவரின் மிஞ்சிய வியாபார இழப்புகளை மற்றும் மூலதனக் கழிவுகளை, ஒரு குறிப்பிட்ட மதிப்பீடு ஆண்டில் முழுமையாகச் சரியீடு செய்ய இயலவில்லையென்றால் எஞ்சியத் தொகையை அவர்களிடையே மாற்றீடு செய்துக் கொள்ளலாம். மேல் விவரம் பெற, 'ஒரு கணவன் மனைவியின் வருமானத்தைத் தனி நபர் வருமானமாக மதிப்பீடு செய்யவதில் உள்ள மாற்றம்' என்ற IRAS-ன் சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

நடப்பு ஆண்டிற்கான உபயோகிக்கப்படாத, வர்த்தக இழப்புகள் மற்றும் மூலதனக் கழிவுகளை, இந்த வர்த்தக இழப்பு மற்றும் மூலதனக் கழிவு எந்த வரி மதிப்பீட்டு ஆண்டில் ஏற்பட்டதோ அதற்கு முந்திய ஒரு வரி மதிப்பீட்டு ஆண்டிற்குக் கொண்டுச் செல்லவும் அந்த வரி மதிப்பீட்டு ஆண்டு வருமானத்திற்கு எதிராகக் கழித்துக் கொள்ளவும் முடியும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

(அ) வர்த்தக இழப்புகள் மற்றும் மூலதனக் கழிவுகளை, இந்த வர்த்தக இழப்பு மற்றும் மூலதனக் கழிவு எந்த வரி மதிப்பீட்டு ஆண்டில் ஏற்பட்டதோ அதற்கு முந்திய ஒரு வரி மதிப்பீட்டு ஆண்டிற்குக் கொண்டுச் செல்ல முடியும்.

(ஆ) முன் கொண்டுச் செல்லக் கூடிய இழப்பு மற்றும் மூலதனக் கழிவுத் தொகையின் உச்சவரம்பு $100,000.

(இ) இந்த அம்சம் கோரப்பட்டால் கொடுக்கப்படும்.

(ஈ) இந்த அம்சம், தனி உரிமையாளர்களையும் கூட்டுத்தொழிலின் பங்காளிகளையும் (கட்டுப்பாடுகள் உள்ள கூட்டுத்தொழிலையும்) உள்ளடக்கிய அனைத்து வியாபாரங்களுக்கும் கிடைக்கப்பெறும்.

மேலும் விவரம் பெற 'Carry-Back Relief System" என்ற IRAS-ன் சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

## மெடிசேவ் பங்களிப்புகள்

### 1. நான் மெடிசேவிற்குப் பங்களிக்க வேண்டுமா?

பின்வரும் நிலைகளில் நீங்கள் மெடிசேவிற்குப் பங்களிக்க வேண்டும்:

(அ) சுய தொழில் செய்பவர்
(ஆ) சிங்கப்பூர் குடிமக்களாகவோ நிரந்தர வாசிகளாகவோ இருந்தால்; மற்றும்
(இ) ஒரு ஆண்டில் $6,000-க்கும் அதிகமாக நிகர வர்த்தக வருமானத்தை ஈட்டியிருந்தால்.

நிகர வர்த்தக வருமானம் உங்களின் மொத்த வருமானத்திலிருந்து அனைத்து அனுமதிக்கக்கூடிய தொழில் செலவுகள், மூலதனக் கழிவுகள் மற்றும் IRAS-ல் நிர்ணயிக்கப்பட்டத் தொழில் இழப்புகளைக் கழித்தத் தொகையாகக் குறிப்பிடப்படுகிறது.

IRAS உங்கள் அசல் வருமானத்தை பொருத்தமான மதிப்பீட்டு ஆண்டின்படி கணக்கிட்டு, நீங்கள் மத்திய சேம நிதிக்கு (மசேநி) பங்களிக்க வேண்டிய மெடிசேவ் தொகையைத் தெரியப்படுத்தக் கணக்கீட்டு அறிக்கையை (Notice of computation) அனுப்பும். நீங்கள் மசேநி வாரியத்தை மெடிசேவ் செலுத்துதல் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளலாம்.

**2. நான் எவ்வளவு செலுத்த வேண்டும்?**

நீங்கள் செலுத்த வேண்டிய மெடிசேவ் தொகை, கட்டுப்படுத்தப்பட்ட ம.சே.நி சந்தா விகிதத்தைப் பொருத்திருக்கிறது. 2007-ம் ஆண்டுக்கான மெடிசேவ் சந்தா வீதங்கள் பின்வருமாறு:

| நிகர ஆண்டு வர்த்தக வருமானம் | ஜனவரி 1 2007 அன்று வயது | | |
|---|---|---|---|
| | 35 வயதிற்குக் கீழ் | 35-க்கு மேல் 45 வயது வரை | 45 வயதிற்கு மேல் |
| $6,000-க்கு மேலிருந்து $12,000 வரை | 2.17% | 2.5% | 2.83% |
| $12,000-க்கு மேலிருந்து $18,000 வரை | 2.17%-க்கும் 6.5%-க்கும் இடையே | 2.5%-க்கும் 7.5%-க்கும் இடையே | 2.83%-க்கும் 8.5%-க்கும் இடையே |
| $18,000-க்கு மேலிருந்து | 6.5% (அதிகபட்சமாக $3,510 வரை) | 7.5% (அதிகபட்சமாக $4,050 வரை) | 8.5% (அதிகபட்சமாக $4,590 வரை) |

**3. மெடிசேவ் சந்தா மற்றும் தன்னிச்சையாகச் செலுத்திய மசேநி சந்தாக்களுக்கு நான் நிவாரணம் கோரமுடியுமா?**

மதிப்பீடு செய்யப்பட்ட உங்கள் நிகர வர்த்தக வருமானத்தின் [மதிப்பீட்டு ஆண்டு 2008-க்கு 34.5%], மொத்த சட்டப்பூர்வ மசேநி சந்தா விகிதம் அல்லது அந்த ஆண்டில் கட்டுப்படுத்தப்பட்ட மசேநி நிவாரணத் தொகை [மதிப்பீட்டு ஆண்டு 2008-க்கு $26,393] இதில் எது குறைவோ, அதை சொந்தத் தொழில் புரியும் நீங்கள் செலுத்திய கட்டாய மற்றும் தன்னிச்சை மசேநி சந்தாக்களுக்கு எதிராக நிவாரணமாகக் கோரலாம்.

தொடர்ந்து வரும் மதிப்பீட்டு ஆண்டின், மசேநி விகிதம் மற்றும் நிவாரண வரம்புக்கு, தயவு செய்து IRAS-ன் இணையப்பக்கத்தைப் பார்க்கவும்.

நீங்கள் மசேநி கணக்கிற்குப் பங்களித்த நாளின் அடிப்படையில் நாங்கள் சேமநிதி நிவாரணத்தை அனுமதிப்போம். உதாரணமாக, நீங்கள் மசேநி நிவாரணத்தை மதிப்பீட்டு ஆண்டு 2008-ல் கோரினால், நீங்கள் உங்கள் மசேநி பங்களிப்பை 31.12.2007-ல் செய்திருக்க வேண்டும்.

நாங்கள் இந்நிவாரணத்தை மசேநி வாரியம் அளிக்கும் தகவலின் அடிப்படையில் அனுமதிப்போம், எனினும் அனுமதிக்கப்பட்டத் தொகை வரம்புக்கு உட்பட்டது. நீங்கள் உங்கள் வருமான வரிப் படிவத்தில் இதனைக் கோரத்தேவையில்லை.

**4. நான் ஒரு ஊழியராகவும் சுயதொழில் புரிபவராகவும் இருக்கும் நிலையில், ஒரு சுயதொழில் புரிபவராக நான் செலுத்திய மெடிசேவ் மற்றும் தன்னிச்சை மசேநி சந்தாக்களுக்கு, நான் எவ்வளவு வரிக் கழிவைக் கோர முடியும்?**

நீங்கள் ஓர் ஊழியராக இருந்து, உங்களின் மொத்த கூட்டு கட்டாய ம.சே.நி சந்தாத் தொகை மற்றும் சுயத்தொழில் புரிபவராக இருந்து, உங்களின் கட்டாய மெடிசேவ் சந்தா தொகை, சுயத்தொழில் புரிபவருக்கான ம.சே.நி நிவாரண வரம்பை விட **குறைவாக** இருந்தால், அதிகபட்ச சேமநிதி நிவாரண வரம்பிற்குட்பட்டு, தன்னிச்சையான ம.சே.நிதி சந்தாக்களுக்கு வரிக் கழிவு வழங்கப்படும்.

<u>எடுத்துக்காட்டு 10:</u>

திரு. டி 30 வயதானவர். அவர் ஒரு சம்பளம் பெறும் ஊழியர் மற்றும் சுயத்தொழிலும் செய்பவர். 2007-ஆம் ஆண்டுக்கான அவருடைய வேலை வருமானம் மற்றும் நிகர வர்த்தக வருமானம் பின்வருமாறு:

| | |
|---|---|
| வேலை வருமானம் | $40,000 |
| நிகர வர்த்தக வருமானம் | $90,000 |

2007-ஆம் ஆண்டில் ஓர் ஊழியராகவும் சுயத்தொழில் புரிபவராகவும் அவர் செலுத்திய ம.சே.நி சந்தாத் தொகை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| வேலையிலிருந்துச் செலுத்தும் கட்டாய ம.சே.நி சந்தாத் தொகை | = | $8,000 (அதாவது, 20% x $40,000) |
| சுயத்தொழில் புரிபவர்கள் செலுத்த வேண்டியக் கட்டாய மெடிசேவ் சந்தாத் தொகை | = | $3,510 (அவருடைய வயதுக்கு, அவருடைய நிகர வர்த்தக வருமானத்திலிருந்து 6.5% சந்தாச் செலுத்த வேண்டும், அதிகபட்சமாக $3,510 வரை) |
| சுயத்தொழில் புரிபவரின் தன்னிச்சையான சந்தாத் தொகை | = | $20,000 |
| அவருடைய மொத்த ம.சே.நி சந்தா தொகை | = | $31,510 |

இருப்பினும், திரு டியின் அனுமதிக்க ஏதுவான ம.சே.நி நிவாரணம் $26,393-க்கு கீழ் கண்டவாறு வரம்பிடப்படும்.

| | | |
|---|---|---|
| வேலையிலிருந்துச் செலுத்தும் கட்டாய ம.சே.நி சந்தாத் தொகை | = | $8,000 |
| கட்டாய மெடிசேவ் சந்தாத் தொகை | = | $3,510 |
| சுயத்தொழில் புரிபவரின் தன்னிச்சையான ம.சே.நி சந்தாத் தொகை | = | $14,883 |
| அனுமதிக்கக் கூடிய மொத்த ம.சே.நி நிவாரணம் | = | $26,393 |

நீங்கள் ஓர் ஊழியராக இருந்து, உங்களின் மொத்த கூட்டு கட்டாய ம.சே.நி சந்தாத் தொகை மற்றும் சுயத்தொழில் புரிபவராக இருந்து, உங்களின் கட்டாய மெடிசேவ் சந்தாத் தொகை, சுயத்தொழில் புரிபவருக்கான ம.சே.நி நிவாரண வரம்பை விட **கூடுதலாக** இருந்தால், கட்டாயச் சந்தாக்களுக்கு மட்டுமே வரிக் கழிவு வழங்கப்படும். நீங்கள், தன்னிச்சையான ம.சே.நி சந்தாக்களுக்கு வரிக் கழிவு கோர முடியாது.

## குற்றங்கள் மற்றும் தண்டனைகள்

### 1. முறையான ஆவணங்களை வைத்திருக்கத் தவறுவது

ஒரு நபர், முறையான பதிவுகளை வைத்திருக்கத் தவறியதாக குற்றஞ்சாட்டப்பட்டால், $1,000-க்கு மிகாத ஒரு அபராதத் தொகைக்கு அவர் உட்படுவார். அந்த $1,000-யை கட்டத் தவறினால் 6 திங்களுக்கு மிகாத சிறைக்காவல் உண்டு.

### 2. வரி விதிப்பிற்குரிய அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறுவது

ஒரு நபர், வரி விதிப்பிற்குரிய அறிக்கையை வழங்கத் தவறினால், $1,000-க்கு மிகாத ஒரு அபராதத் தொகைக்கு அவர் உட்படுவார். அந்த $1,000-யை கட்டத் தவறினால் 6 திங்களுக்கு மிகாத சிறைக்காவல் உண்டு.

### 3. ஏற்கத்தக்க காரணம் ஏதும் இல்லாமல் தவறான படிவத்தைச் சமர்ப்பித்தல்

ஏற்கத்தக்கக் காரணமின்றி தவறானப் படிவத்தைச் சமர்ப்பித்தால், குறைவாகக் கொடுக்கப்பட்ட வரித் தொகையின் இரட்டிப்பானத் தொகைக்கு ஈடான தண்டத் தொகையைச் செலுத்துவதற்கு உட்படுவீர்கள். தவிர $5,000-க்கு மிகாத ஒரு அபராதத் தொகையைச் செலுத்துதல் அல்லது 3 ஆண்டுகள் மிகாத சிறைக்காவல் அல்லது ஒரு சேர அபராதமும் சிறைக்காவலும் பெறக்கூடும்.

### 4. வேண்டும் என்றே வரிகளைத் தவிர்த்தல் அல்லது வேறு எவருக்கேனும் தவிர்க்க உதவுதல்

வரி தவிர்ப்பு வழக்குகளுக்கு, நீங்கள் வேண்டுமென்றே தவிர்த்தாலோ பிறருக்கும் தவிர்க்க உதவினாலோ, நீங்கள் தவிர்த்த வரித் தொகையைவிட மும்மடங்கு அதிகமாக தண்டத்தொகையைச் செலுத்தவேண்டியிருக்கும், தவிர $10,000-க்கு மிகாத ஒரு அபராதத் தொகையைக் கட்ட வேண்டியிருக்கும் அல்லது 3 ஆண்டுகளுக்கு மிகாத சிறைக்காவல் அல்லது ஒரு சேர அபராதத்திற்கும் சிறைக்காவலுக்கும் உட்படக்கூடும்.

கடும்மையான ஏமாற்றுத் தவிர்ப்பு வழக்குகளில், நீங்கள் வேண்டுமென்றே தவிர்த்தாலும் அல்லது பிறருக்குத் தவிர்க்க உதவினாலும், நீங்கள் தவிர்த்த வரியைவிட 4 மடங்கு அதிகமாக

தண்டத்தொகையைக் கட்டுவதற்கு உட்படுவீர்கள் மற்றும் அபராதமாக $50,000-க்கு மிகாதத் தொகை அல்லது 5 ஆண்டுகளுக்கு மிகாத சிறைக்காவல் அல்லது ஒரு சேர அபராதமும் சிறைக்காவலும் பெறக்கூடும்.

## தொடர்புகள்

**(அ) IRAS தகவல் வழிகள்**

**IRAS இணையப்பக்கம்**
http://www.iras.gov.sg

- இவ்வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளச் சுற்றறிக்கைகளை IRAS இணையப்பக்கத்தில் e-Tax Guides of 'Tax Resources'-ன் கீழும் பெறலாம்.

**24 மணி நேர ஒருங்கிணைக்கப்பட்ட வியாபார வருமான வரி தொலைபேசி சேவை**
1800-356 8611

**ஒருங்கிணைக்கப்பட்டப் பொருள் சேவை வரி தொலைபேசி சேவை**
1800-356 8633

**வரிசெலுத்துவோர் சேவை நிலையம்**
1-வது மாடி வருவாய் இல்லம்
55 நியூட்டன் ரோடு
சிங்கப்பூர் 307987
(நொவினா பெருவிரைவு போக்குவரத்து நிலையத்தின் எதிர்ப்புறம் உள்ளது)
செயல்படும் நேரங்கள்: காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை (திங்கட்கிழமைகள் முதல் வெள்ளிக்கிழமைகள் வரை)
காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை (சனிக்கிழமைகளில்) - தனிநபர் வருமான வரி

**(ஆ) ம.சே.நி கழகம்**

**ம.சே.நி கழக இணையப்பக்கம்**
http://www.cpf.gov.sg

**ம.சே.நி அழைப்பு நிலையம்**
1800-227-1188

**(இ) கணக்கியல், நிறுவன ஒழுங்குமுறை ஆணையம் (ACRA)**

**ACRA இணையப்பக்கம்**
http://www.acra.gov.sg

**ACRA உதவிமையம்**
6248 6028

**(ஈ) சிங்கப்பூர் நாணய வாரியம் (MAS)**

**MAS இணையப்பக்கம்**
http://www.mas.gov.sg

---

இந்த குறிப்புகள் வழிகாட்டுதலுக்கு மட்டுமே மற்றும் அச்சிடும் போது (டிசம்பர் 2007) இருந்த வரி நிலைகளைத்தான் இவை பிரதிபலிக்கின்றன.

SQA சின்னம் மக்கள் வளர்ச்சி ISO 9000